# பண்மகள்

PANMAGAL பண்மகள்

இதழ்: 01 ஒக்ரோபர் – டிசெம்பர் 2007 அன்பளிப்பு: 10 ரூபா


## 185 ஆவது அகவையில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை




மனிதர்கள் பிறக்கிறார்கள்; வாழ்கிறார்கள்; மடிகிறார்கள். எவரொருவர் நீண்ட காலம் – எண்பது வயதுக்கு மேல் – வாழ்கிறாரோ, அவரை ஆயிரம் பிறைகண்டவர் என வாழ்த்துகிறோம்.

அதுபோலவே பாடசாலைகள் பல தோன்றுகின்றன. சில பாடசாலைகள் தோன்றிய வேகத்திலேயே மறைந்து போகின்றன. சில எந்த முன்னேற்றமும் இன்றி இயங்குகின்றன. அதைவிடக் கீழ்நிலையுற்றுத் தளர்ந்து போன பாடசாலைகளும் உள்ளன. மனித வாழ்வைப் போலவே ஒரு பாடசாலையின் நிலைத்திருத்தலும் சவால் நிறைந்ததே!

நூற்றாண்டுப் பாரம்பரியம் மிக்க விரல்விட்டு எண்ணக்கூடிய பாடசாலைகளில் எமது பாடசாலையும் ஒன்றென்பது நமக்குப் பெருமையான விடயமே.

இப்பாடசாலை 1823ஆம் ஆண்டு அமெரிக்க மிஷனரியின் உதவியுடன் பாலர் பாடசாலையாக ஆரம்பிக்கப்பட்டது. 1834 முதல் 1843 வரையான காலத்தில் ஆர். ஜே. எக்காட் அவர்களின் மேற்பார்வையில் முதற்தர பாலர் பள்ளிக்கூடமாக இயங்கியது. கில்லிஸ் அம்மையாரின் நிர்வாகத்தில் அவரது பெருமுயற்சியால் 1868 முதல் 1880 வரையான காலத்தில் விடுதி வசதியுடன் கூடிய பெண்கள் பாடசாலையாகப் படிமலர்ச்சி அடைந்தது.

(தொடர்ச்சி 23ம் பக்கம்)

# பண்மகள்

காலாண்டிதழ்

**ஆலோசனை**
திருமதி கி. சிவராஜா
(அதிபர்)

**பிரதம ஆசிரியர்**
திரு. சு. ஸ்ரீகுமரன்

**இணையாசிரியர்**
திருமதி F. R. J. ஜெயந்தன்

**உதவி ஆசிரியர்கள்**
திருமதி தி. கருணீசன்
செல்வி கௌ. இராசதுரை
திரு. பொ. அமிர்தலிங்கம்

**அச்சுப் பதிப்பு**
J. S. பிறின்டேர்ஸ்
பண்டத்தரிப்பு

**வெளியீடு**
பண்டத்தரிப்பு
பெண்கள் உயர்தர
பாடசாலை


# தலைவாசல்

இன்றைய உலகம் அறிவை மையப் படுத்தியது. அறிவே பலம்; அறிவே உழைப்பு; அறிவே வாழ்க்கை. தினந்தோறும் புதுப்புதுக் கண்டுபிடிப்புக்கள் நிகழ்கின்றன. புதிய சிந்தனைகள் தோன்றுகின்றன. உலக மயமாக்கமும், தகவல் தொடர்பாடல் தொழி நுட்பப் புரட்சியும், பின்நவீனத்துவம் முதலான சிந்தனைப் போக்குகளும் இன்றைய உலக அசைவியக்கத்தை நிர்ணயிக்கின்றன. இந்தக் கால மாற்றத்தை உள்வாங்காமல் இருக்கும் ஒவ்வொருவரும் காலாவதியான மனிதர் களாக மாறி விடுவார்கள்.

பாடசாலைகள் மாணவர்களதும், ஆசிரியர்கள தும் உள்ளார்ந்த ஆற்றல்களை வளர்த்து, அவர்களிடத்து அறிகைத் திறன்களை விருத்தி யாக்குவது இன்றியமையாததாகும். எதிர்கால உலகுக்கான நற்பிரஜைகளை வனைந்து தரும் பெரும் பொறுப்பு பாடசாலைகளுக்கு உள்ளது. எனவேதான் பண்மகள் தன் மக்களை வளர்த்து அவயத்து முந்தியிருக்கச் செய்யும் நோக்குடன் புதுவேடம் புனைந்துள் ளாள். கல்லூரி அன்னையை வளர்த்து எழி லூட்டும் பணியினைச் சிரமேற் கொள்வதோடு, எதிர்கால சிற்பிகளை உருவாக்கும் பயிற்சிக் களமாக பண்மகள் அமையும். அதைப் பயன்படுத்துவதும், வளர்த்துவிடுவதும் உங்கள் கைகளில் தான் இருக்கிறது.

- ஆசிரியர்

**பண்மகளிர் நாங்கள் விண்ணையும் தொடுவோம்!**

# புவி நடுக்கம்

இயற்கை அனர்த்தங்களில் ஒன்று புவி நடுக்கமாகும். புவியோட்டுத் தகடுகள் ஒன்றோடொன்று நெருங்கி மோதுகையில் ஏற்படும் அமுக்கம் திடீரென விடுபடும் பொழுது புவிநடுக்கம் புவியோட்டுத் தகடுகளின் ஓரங்களின் வழியாக ஏற்படுகின்றது. இயற்கைக் காரணங்களால் புவியோட்டின் ஒருபகுதி சடுதியாக அதிர்ந்தால் அதனைப் புவி நடுக்கம் என்பர். புவியோட்டின் கீழ்ப்பகுதிகளில் ஏற்படும் அகவிசைத் தாக்கங்களினால் தோன்றும் அலைகள் புவியோட்டின் ஒருபகுதியை நடுக்கத்திற்குள்ளாக்குகின்றன.

புவிநடுக்கங்கள் இயற்கைக் காரணங்களாலும், மானிடக்காரணி களாலும் உருவாகின்றன. புவிநடுக்கங்கள் தோன்றுவதற்குரிய பிரதான காரணி புவிக்கவசத்தகடுகளின் நகர்வேயாகும். புவியோட்டின் கீழ்ப்பகுதிகளில் ஏற்படும் அகவிசைகள் தோற்றுவிக்கும் தாக்கத்தால் கவசத்தகடுகள் ஒன்றிலிருந்து ஒன்று விலகியும், ஒடுங்கியும், அமிழ்ந்தும் செயற்படுகின்றன. தகட்டோடுகளின் இந்த அசைவு புவிநடுக்கத்தைத் தோற்றுவிக்கின்றது. 1993ஆம் ஆண்டு இந்தியாவின் மகாராஷ்டிரா மாநிலத்தில் நிகழ்ந்த புவிநடுக்கத்திற்கு இந்திய கவசத்தகடு, ஐரோ – ஆசிய கவசத்தகட்டினை நோக்கி நகர்ந்தமையே காரணம் என அறியப்பட்டுள்ளது.

புவிநடுக்கம் தோன்றுவதற்கு எரிமலைகளின் செயற்பாடுகளும் காரணமாகஉள்ளன. எரிமலைகள் கக்குகை நிகழ்த்தும் போது புவி நடுக்கம் அயற்பகுதிகளில் தோன்றுகின்றது. சிறியளவிலான புவிநடுக்கத்தைத் தோற்று விக்கும் இடவிளக்கவியற் காரணிகளில் மண்சரிவுகள், பனிக்கட்டித் திணிவுகளின் பாரிய சரிவுகள் பாறைச் சரிவுகள் என்பன புவிநடுக்கத்தைத் தோற்றுவிக்கின்றன. பெருக்கு அலைகளின் தாக்குதல், பெரும் நீர்த்தேக்கங்கள் உடைவதால் ஏற்படும் வெள்ளப்பெருக்கு என்பனவும் சிறியளவிலான புவி நடுக்கங்கள் ஏற்படக் காரணமாகின்றன.


**திருமதி தி. கருணீசன்**

மனித செயற்பாட்டினால் உருவாக்கப்படும் நீர்த்தேக்கங்கள், ஆழமான கிணறுகள், அணுப்பரிசோதனைகள் புவிநடுக்கத்திற்கு வழி செய்கின்றன. 2003ம் ஆண்டு இலங்கையின் மலைநாட்டில் உணரப்பட்ட புவி நடுக்கத்திற்கு மகாவலிகங்கையில் அமைக்கப்பட்ட பாரிய ஒன்பது நீர்த்தேக்கங்களே காரணம் எனக் கருதப்பட்டது. நிலத்திற்கடியில் அணுகுண்டுகளை வெடிக்க வைக்கும் செயலும் புவி நடுக்கத்திற்குக் காரணமாகின்றது.

புவிநடுக்கம் நிகழுமிடம் குவியம் எனவும், அதற்கு நிலைக்குத்தாக மேற்பரப்பில் உள்ள இடம் மேன்மையம் எனவும் குறிப்பிடப்படும். புவிநடுக்

கங்கள் அலை வடிவிற் பரவுகின்றன. புவிநடுக்க அலைகளை Pஅலை, Sஅலை, Lஅலை என மூன்றாக வகுப்பர். Pஅலைகளே முதலில் வெளிப்படும். Sஅலைகளே புவிநடுக்க அழிவுகளைத் தோற்றுவிப்பன. Lஅலைகள் வேகம் குறைந்தவை.

புவிநடுக்க அளவுகளை அளவிடுவதற்குப் புவி நடுக்கமானி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. புவிநடுக்கங்களின் சக்தியை அளவிடுவதற்கு ரிச்டர் அளவு முறை பயன்படுத்தப்பட்டு வருகின்றது.




புவி நடுக்கம் ஒடுங்கிய புவியியல் வலயங்களில் ஏற்படுகின்றது. இந்த ஒடுங்கிய புவியியல் வலயங்கள் கவசத்தகட்டோடுகளின் விளிம்புகளாக இருப்பதைக் காணலாம். பசுபிக் சமுத்திரத்தில் புவி நடுக்கம் ஏற்படும் பகுதி ஒரு வட்ட வலயமாக இருக்கின்றது. இதனைப் பசுபிக் மோதிர வலயம் என்பர். பூமியில் உருவாகின்ற புவிநடுக்கங்களில் அதிகமானவற்றின் உற்பத்திப் பிரதேசமாக இந்த பசுபிக் வட்டவலயம் விளங்குகின்றது. மத்தியதரைக்கடல், இமயமலைவலயம் முக்கியமான இன்னொரு புவிநடுக்க வலயமாகும். ஐஸ்லாந்து முதல் தென் அத்திலாந்திக் மத்திய சமுத்திர வலயம், ஆபிரிக்காவின் சிறப்புவலயம் என்பனவும் ஏனைய புவிநடுக்க வலயங்களாகும்.

புவி நடுக்கத்திற்குள்ளாகும் நாடுகள் என இந்தோனேசியா, யப்பான், இந்தியா, பாகிஸ்தான், மெக்சிக்கோ, ஈரான், துருக்கி, சீனா, இத்தாலி, ஆப்கானிஸ்தான் போன்றவற்றைக் குறிப்பிடலாம். 2004ஆம் ஆண்டு டிசெம்பர் 26ஆம் திகதி இந்தோனேசியாவின் சுமாத்திராத் தீவிற்கு அருகே இந்து மா சமுத்திரத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. ரிச்டர் அளவுகோலில் 9.0 புள்ளியாக இந்த

நிலநடுக்கம் பதிவாகி உள்ளது. உலகில் இதுவரை ஏற்பட்ட நில நடுக்கங்களில் ஐந்தாவது பெரிய நடுக்கம் இது என்று தெரிவிக்கப்படுகின்றது. கடந்த நாற்பது வருடங்களில் உலகில் ஏற்பட்ட மிகப் பெரிய நடுக்கமும் இதுவேயாகும்.

புவிநடுக்கங்கள் பேரழிவைஏற்படுத்தக் கூடியவை. அதிக உயிர்ச்சேதத்தையும், பொருட்சேதத்தையும் உண்டாக்கும் நடுக்கத்தினால் கட்டிடங்கள் திடீரெனத் தகர்ந்து சரிவதால் அவற்றின் இடிபாடுகளுக்கிடையில் அகப்பட்டு இறப்போர் தொகை மிக அதிகமாகும். புவிநடுக்க விளைவால் எரிபொருட் குழாய்கள் உடைந்து தீப்பற்றுவதால் இறப்புக்கள் நிகழ்கின்றன. புவிநடுக்கத்தின் விளைவால் ஆழிப்பேரலைகள் உருவாகி பேரழிவுகளை ஏற்படுத்துகின்றது. இதற்குத் தக்க உதாரணம் 2004ம் ஆண்டு டிசம்பரில் ஏற்பட்ட சுனாமி எனப்படும் ஆழிப் பேரலையாகும்.

பேரழிவினை ஏற்படுத்துகின்ற புவிநடுக்கத்திலிருந்து மக்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். புவிநடுக்க அனர்த்தத்தை முகாமைத்துவம் செய்யும் போது புவிநடுக்கத்தால் ஏற்படும் அழிவுகளை மதிப்பீடு செய்து கொள்ளலாம்.

புவி நடுக்கம் பற்றிய விபரங்களைப் பொதுமக்களுக்கு அறியச் செய்தல் வேண்டும். அது பற்றிய கல்வியினைப் பெற்றுக்கொடுத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதன் மூலம் வெற்றிகரமாக புவிநடுக்கத்தால் ஏற்படும் விளைவுகளுக்கு முகம் கொடுக்க முடியும்.

◆◆

## கீதோபதேசம் நாட்டிய நாடகம்



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடாத்தப்பட்ட காவிய கதா நாடகப் போட்டியில் எமது பாடசாலை மாணவிகளால் ஆற்றுகை செய்யப்பட்ட "கீதோபதேசம்" நாட்டிய நாடகம் மூன்றாமிடத்தைப் பெற்றது. நெறிப்படுத்திய ஆசிரியைகள் செல்வி பா. குமுதினி, திருமதி ப. சிவாஜினி ஆகியோருக்கும், பங்குபற்றிய மாணவிகளுக்கும் எமது பாராட்டுக்கள்.

◆◆

# பாடசாலை நிகழ்வுகள்

## பரிசளிப்பு விழா



பாடசாலையின் பரிசளிப்பு விழா 18.09.2007 செவ்வாய்க் கிழமை பாடசாலை அதிபர் திருமதி. கி. சிவராஜா அவர்களது தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப. விக்னேஸ்வரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக வலி. தென் மேற்கு பிரதேசசபையின் உப அலுவலகப் பொறுப்பதிகாரி ஞா. தேவச்சந்திரன் அவர்களும், கௌரவ விருந்தினராக யாழ். தினக்குரல் பொதுமுகாமையாளரும், எமது பாடசாலையின் ஆசிரியராக இருந்து பாடசாலையின் அபிவிருத்தியில் அதிக பங்களிப்பை நல்கியவருமான ஆ. சி. நடராஜா அவர்களும் கலந்து கொண்டனர். திருமதி தவமணி விக்னேஸ்வரன் அவர்கள் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். மாணவிகளின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

◆◆

## சின்னஞ் சூட்டும் விழா



பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் மாணவ முதல்வர்களின் சின்னஞ்சூட்டும் விழா **05.09.2007** புதன்கிழமை சிரேஷ்ட மாணவ தலைவி செல்வி மயூரி மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் திருமதி கி. சிவராஜா பிரதம விருந்தினராகவும், பிரதி அதிபர் திருமதி இ. இராஜசேகரம் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொண்டு சின்னங்களை அணிவித்தனர். அதிபர், ஒழுக்காற்றுக் குழுப் பொறுப்பாசிரியர் திரு வே. சிவசக்திவேல் ஆகியோர் மாணவிகளது ஒழுக்காற்றை மேம் படுத்தல் தொடர்பாக உரையாற்றினர்.

◆◆

## ஆங்கில தினம்



எமது பாடசாலையின் 'ஆங்கில தினம்' இவ்வருடம் ஆடிமாதம் 20ஆம் திகதி ஆங்கிய மன்றத்தினால் நடாத்தப்பட்டது. இவ்விழாவிற்கு வலிகாமம் கல்விவலய ஆங்கிய உதவிப்பணிப்பாளர் திரு. ஏ. கணேசலிங்கம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். பலவிதமான ஆங்கில நிகழ்வுகள் மேடையேற்றப்பட்டன.

◆◆

## சிறுவர் நாடகம்

எமது பாடசாலையின் ஆரம்பப்பிரிவு மாணவர்களால் அளிக்கை செய்யப்பட்ட "நரிமேளம்" சிறுவர் நாடகம் குடும்பப் பாடசாலை மட்டத்தில் மூன்றாம் இடத்தைப் பெற்றது. பங்குபற்றிய மாணவர்களுக்கும், அவர்களைப் பயிற்றுவித்த திருமதி த. அகிலன், செல்வி செ. மொறின் வத்சலா ஆகியோருக்கும் எமது பாராட்டுக்கள்.

◆◆

## புலமைப்பரிசில் பரீட்சை



இவ்வாண்டு நடைபெற்ற தரம் ஐந்து மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலை மாணவிகள் இருவர் சித்தியடைந்துள்ளனர்.

செல்வி. கொ. அன்ரனற் நொயலின் – 143 புள்ளிகள்

செல்வி. ர. லுக்சனா – 143 புள்ளிகள்

மேலும் 10 மாணவர்கள் 100 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். இவர்களையும், இவர்களுக்குச் சிறப்பாகக் கற்பித்த செல்வி நாகேஸ்வரி கதிரவேற்பிள்ளை அவர்களையும் பாராட்டுகின்றோம்.

◆◆

# செகுவா: பிரமாண்டமான மரங்கள்

உருவில் மிகப் பெரியனவும் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் நிலைத்து நிற்பனவுமான மரங்கள் இவையாகும். வட அமெரிக்காவின் மேற்குப்பகுதியில் உள்ள கலிபோர்ணியக் காடுகளில் இவ்வகை மரங்கள் காணப்படுகின்றன. 2000 தொன்னுக்கு மேல் எடை கொண்ட இம்மரத்திலிருந்து 30,000 கன அடியளவுடைய தடி கிடைக்குமளவுக்கு இது மிகப் பிரமாண்டமானது.



செகுவாவில் இரு வகை உண்டு. ஒன்று செகுவா ஜை ஜானன்ட் (sequoia giganant) மற்றையது செகுவா செம்பேர்விரெஸ் (sequoia sempervirews). இவை முறையே பெருமரம், செம்மரம் என்று அழைக்கப்படும். இவை இரண்டுமே மிகப் பெரிய மரங்களாகும். செம்மரம் கலிபோர்ணியாவின் வடபகுதியில் பசுபிக் சமுத்திரக்கரையை அடுத்த மலைகளில் வளர்கிறது. சாதாரணமாக இம்மரங்கள் தனித் தோப்புக்களாக வளர்கின்றன. இது 300 அடிக்கு மேல் உயரமாக வளர்கின்றது. இதன் அடி மரம் 15 — 18 அடி விட்டமானது. 50 அடி சுற்றளவுள்ளது. இவற்றில் ஒரு மரம் 365 அடி உயரமானது. இதுவே இப்போது உலகத்திலுள்ள மரங்களில் எல்லாம் உயரமானது. கிளைகள் நடுமரத்தில் இருந்து செங்குத்தாக கிடை மட்டத்தில் வளரும். கிளை மரங்கள் பச்சைத் தேர் போன்று அழகிய கூம்பு வடிவத்தில் நிற்கும். இதன் பட்டை கருமையான செம் பழுப்பாக இருக்கும். இலைகள் ஓர் அங்குல நீளத்தில் தட்டையான ஊசிபோல கிளையின் இரு பக்கங்களிலும் பொருந்தியிருக்கும். விதைகள் மிகச் சிறியவை. நன்றாக முதிர்ந்த மரங்கள் 400 முதல் 2000 ஆண்டுகள் வயதானதாக இருக்கும்.

பெருமரம் கலிபோர்ணியாவில் உள்ள சியெரா நெவாடா மலைத் தொடரின் 5000- 7000 அடி உயரமுள்ள மேற்குச் சரிவிலே வளர்கிறது. இது அங்குள்ள ஏனைய இன மரங்களோடு கலந்து வாழ்கிறது. இது செம்மரத்தைப் போன்று அவ்வளவு உயரமாக வளர்வதில்லை. ஆயினும் இதன் அடி மரம் மிகப்பருத்திருக்கும். ஒரு மரம் சுற்றளவில் 100 அடிக்கு மேல் இருக்கும். இதற்கு வயது 3000 ற்கும் 4000ற்கும் இடையில் இருக்கும் எனக் கணக்கிடுகின்ற னர். இந்த இன மரங்களை வெட்டுவது

மேரி ஜான் றபேக்கா பிரான்சிஸ்
A/L 2009

தடைசெய்யப்பட்டுள்ளது. இம் மரத்தின் பட்டை சிவப்பு நிறமாக இருக்கும். கிளைகள் மேல் நோக்கி ஒரு கோணத்தில் வளரும். இலைகள் மிகச் சிறியவை. கிளையைச் சுற்றிலும் எல்லாத் திசைகளிலும் வளர்ந்திருக்கும். விதை முற்றுவதற்கு 12 ஆண்டுகள் செல்லும் விதை முற்றிய பின்பும் 12 ஆண்டுகள் மரத்தில் பச்சையாகவே இருக்கும்.

செம்மரத்தின் வெட்டுமரம் அழகிய செம் பழுப்பு நிறமானது. சமமான ரேகைகள் உள்ளது. பலமானது. இரண்டு மரங்களையும் வீடுகட்டுவதற்கும் மற்றைய வேலைகளுக்கும் பயன் படுத்துகின்றனர்.

செகுவா மரங்களை பூச்சியோ, பூஞ்சணமோ எளிதில் தாக்குவதில்லை. தீயினால் கூட அதிகம் தாக்கப்படுவதில்லை. இம்மரங்களில் குங்குலியம் போன்ற பிசின் இல்லை. மிச்சுக்கட்டி (pitch) எனும் கரிப்பிசினும் இல்லை. இப்பண்புகளே இம் மரங்கள் பூச்சி முதலியவற்றைத் தடுத்துக்கொள்ளக் காரணம்.

இப்பெருமரங்கள் அழியாமல் நிலைத்திருக்க வேண்டும் என்பதற்காக இவை வளரும் காட்டின் ஒருபகுதியைப் பாதுகாத்து வருகின்றனர். இந்தப்பகுதிக்கு செகுவா தேசியப் பூங்கா (Sequiia national park) என்று பெயர்

சுமார் 1760 முதல் 1843 வரையில் வாழ்ந்திருந்த செரோக்கிய இந்தியர் செகுவாயா (Sequiia) என்பவரது பெயரை இம் மரங்களுக்கு இட்டிருக்கின்றனர். இவர் தம்முடைய கூட்டத்தினருக்கு அவர்கள் மொழியை எழுதவும், படிக்கவும் அரிச்சுவடி ஒன்றை வகுத்துக் கொடுத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

◆◆

## சைவநெறித் தேர்வு



சைவ பரிபாலன சபையால் நடாத்தப்படும் சைவநெறித் தேர்வில் எமது பாடசாலை மாணவியான செல்வி நிந்துஜா வேல்முருகன் மூன்றாமிடத்தைப் பெற்றுள்ளார். செல்வி பாலினி பாலசுப்பிரமணியம், செல்வி கிருசாளினி ஶ்ரீதரன், செல்வி ஜனிதா கணேசலிங்கம் ஆகியோர் ஆறுதல் பரிசினைப் பெற்றுள்ளனர். இவர்களுக்கு எமது பாரட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

◆◆

# ஆசிரியரது கடமைகளும், பொறுப்புக்களும்



ஆசிரியர்களுக்கென்று முக்கியமான சில கடமைகள் உண்டு. இந்த வகையில் தம்மிடம் கற்கும் மாணவர்களை நன்கு கற்றவர்களாக, கட்டுப்பாடு உடையவர்களாக, தேசிய உணர்வுடையவர்களாக உருவாக்குவது ஒரு நல்ல ஆசிரியரிடம் எதிர்பார்க்கப்படுகின்றது. மாணவர்களை முன்னேற்றம் அடையச் செய்வதற்கு அவர்களுடைய அறிவுசார், உடலியல், உளவியல், ஆத்மீக, சமூகத்தேவைகள் அனைத்தையும் நிறைவேற்ற வேண்டியுள்ளது. மேலும் அதற்கு வேண்டிய உதவிகளைச் செய்வது மட்டுமல்லாது பொருத்தமான நெறியில் வழிநடாத்துவதும் ஆசிரியர்களின் பொறுப்பாகும். மாணவர்களை வழிநடாத்திச் செல்வதற்கு ஆசிரியர்களுக்கு சில ஆளுமைப் பண்புகள் அவசியமானதாகும். அந்த வகையில் பிஞ்சு உள்ளங்களைத் தன்பால் ஈர்க்கும் வன்மை, அவற்றின் பால் தமது உள்ளம் நெகிழும் மென்மை, இனிமையாக உரையாடும் திறன் என்பன அமைய வேண்டும்.

ஓர் ஆசிரியருடைய செயற்பாட்டில் குறிப்பிடத்தக்க கடமைகளில் இன்னொரு அம்சம் பாடசாலை சார்பானது. தான் கற்பிக்கும் பாடசாலையில் தனக்கென ஒதுக்கப்படும் வேலைகளை ஒழுங்காகவும், கிரமமாகவும், சிறப்பாகவும் செய்வது அவருடைய முக்கிய பொறுப்பாகும். இப் பொறுப்பினை ஓர் ஆசிரியர் எந்தளவிற்கு உணர்ந்து நிறைவேற்றுகிறார் என்பதைப் பொறுத்தே அவருடைய பணி அளவிடப் படுகின்றது. அந்த அளவீட்டின் அடிப் படையிலேயே பாடசாலையிலும் அதனைச் சுற்றியுள்ள சமுதாயத்திலும் அவருக்கு இருக்கும் மதிப்பு முக்கியத்துவம் பெறுகின்றது.

ஓர் ஆசிரியர் தான் பணிபுரியும் பாடசாலையுடன் தன்னை இணைத்து இனம் கண்டு கொள்வது மிகவும் அவசியமானதாகும். ஆசிரியர்களுடைய பணி சிறப்பாகப் பயணிக்க வேண்டுமானால் அவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் இடையே நெருக்கமும், புரிந்துணர்வும் இருத்தல் வேண்டும். இவ்விதமான நெருக்கமும், புரிந்துணர்வும் ஆசிரியர்களுடைய பணியை இலகுவாக்கும் சந்தர்ப்பங்களும் உண்டு. எனவே மாணவர்களின்

**உரம்**

**சாணமும் சருகும்**
**மரத்திற்கு உரம்**
**இன்பமும் துன்பமும்**
**மனத்திற்கு உரம்**

**அகம் காட்டும் கண்கள்**

**கண்களிலே எனக்கு**
**விருப்பம்**
**அவைதான்**
**என் மனக் கவலையை**
**என் சந்தோஷங்களை**
**என்னில் அறியச்**
**செய்கின்றன.**
**பிறருக்கும்**
**அறிவிக்கின்றன.**
**ஆதலால் கண்களை நான்**
**நேசிக்கிறேன்.**

**ப. தர்மினி**

விருப்பத்தில் கவனம் செலுத்தும் ஆசிரியர் அவர்களுடைய பெற்றோர்களுடன் ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு மாணவர்களின் முன்னேற்றத்தினைத் தொடர்ந்து அவதானிப்பதற்கு உதவுவதாகும். பாடசாலைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பெற்றோர்கள் அறிந்து கொள்வதற்கும் அதன் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்யப் பெற்றோரைத் தூண்டுவதற்கும் இத்தகைய தொடர்புகள் துணைபுரியும். பெற்றோர்களின் ஆதரவை உறுதிப்படுத்துவதன் மூலம் பாடசாலைக்குத் தேவையான பலமான அத்திவாரத்தையும் ஏற்படுத்தலாம். இப்படியல்லாது பெற்றோரை உதாசீனம் செய்து நடந்து கொண்டால் பாடசாலை அதன் அடித்தளத்தில் ஆட்டம் கண்டுவிடும்.

பொதுவாக நோக்கும்போது ஆசிரியத்துவமானது ஒரு கலையாகக் கருதப்பட்டாலென்ன அல்லது நுணுக்கங்கள் நிறைந்த ஒரு தொழில் துறையாகக் கொள்ளப்பட்டாலென்ன அதன் மனிதவியற் தன்மை தெளிவாகின்றது. எனவே அதன் முக்கிய செயற்பாடு தொடர்பு கொள்ளுதல் ஆகும். இங்கு ஒருவர் ஒரு பாடத்தைச் சிறப்பாகக் கற்பிக்கின்றார் என்று கூறின் அங்கே யாரோ ஒருவரேனும் கற்றிருக்க வேண்டும். இல்லையேல் அதனைக் கற்பித்தல் என்று கூற முடியாது. இவ்வகையில் கற்பித்தல், கற்றல் இரண்டும் பிரிக்க முடியாத பின்னிப் பிணைந்த செயற்பாடுகளாகும். இதன் நுணுக்கங்களையும், வளர்ச்சிகளையுமே வகுப்பறை அனுபவத்தின் மூலம் ஆசிரியர்கள் எதிர்கொள்கின்றார்கள்.

**திருமதி த. அகிலன்**

◆◆

## PROVERBS - பழமொழிகள்

1. Face is the index of the mind
   அகத்தின் அழகு முகத்தில் தெரியும்
2. As you saw so shall you reap
   தினை விதைத்தவன் தினை அறுப்பான்
   வினை விதைத்தவன் வினை அறுப்பான்
3. All the glitters is not gold
   மின்னுவதெல்லாம் பொன்னல்ல
4. Art is long life is short
   கல்வி கரையில கற்பவர் நாள் சில
5. Make hay while the sun shine
   காற்றுள்ளபோதே தூற்றிக் கொள்

# பெண்களே நாட்டின் கண்கள்

"உலகிலுள்ள எல்லா உயிர்களுக்கும் உணர்வினை அளிப்பது சூரிய ஒளியும், அம்மாவும் ஆகும்". அதாவது உலகிலே சூரிய ஒளி இல்லாது விடில் நாம் அனைவரும் வாழமுடியாது. அது போலவே பெண்ணென்று ஒரு சமூகம் இல்லாவிடின் நாமெல்லாம் இன்று இப்பூமியிலே அவதரிக்க முடியாது. வாழ்க்கைக்கு உயிரோட்டத்தையும், உலகிற்கு உறுதியினையும் தருவதில் ஆண்களுடன் சரிசம நிலையிலே காணப்படுபவர்கள் இப்பெண்கள் தான். ஆணும் பெண்ணும் சமூகத்திலே சரிநிகராக இருக்க வேண்டும் என்ற கருத்தே காணப்படுகின்றது. எந்தவொரு மனிதன் உருவாவதற்கும் பெண்தான் காரணம். இக்கருத்தை சக்தி இல்லையேல் சிவனில்லை என்ற வாக்கியத்தினூடே ஆதாரப்படுத்தலாம்.

சிந்துவெளி காலத்திலே ஒரு பெண்ணின் கருப்பையினுள் இருந்து மரமொன்று முளைத்து வந்ததாக கூறப்பட்டுள்ள இது எதனைப் புலப்படுத்துகிறது என்றால் உலகத்தின் தோற்றத்திற்குக் காரணம் பெண்ணேயாவாள். சமூகம் என்பது ஆண், பெண் என்ற இருவரையுமே கொண்டது. உலக சனத்தொகைத் தரவுகளின் படி ஆண்களும் பெண்களும் சம அளவிலே காணப்படுகின்றனர்.



இலங்கையில் பெண்களின் அந்தஸ்து நிலையானது மிக உயர்வாகக் காணப்படுகின்றது. ஆனால் மத்திய கிழக்கு நாடுகளில் பெண்களின் நிலை மிகவும் மோசமாகக் காணப்படுகிறது. இந்நாடுகளிலெல்லாம் பெண்களைவிட ஆண்களின் அந்தஸ்தே மேன்மை பெறுகிறது. இதனால் பெண்கள் மனநிலை பாதிக்கப்பட்டவர்களாகவும் மிகவும் விரக்தி அடைந்தவர்களாகவும் காணப்படுகின்றார்கள். "எனக்கென்றால் வானத்துக்குப்போனாலும் நிம்மதி இல்லை" எனப் பெண்கள் ஆதங்கப்படுவதும் பெண்களின் மனநிலையை எடுத்துக் காட்டுகின்றது.

ஆரம்ப காலத்தில் கல்வியே கற்கக்கூடாது. அவ்வாறு அவர்கள் கல்வி கற்றால் ஆண்களை மதிக்காமல் நடந்து கொள்வார்கள் என்ற ஒரு கீழ்த்தரமான புத்தி மக்கள் மத்தியில் காணப்பட்டது. அதனால் இவர்களின் அந்தஸ்து இழக்கப்பட்டது. பெண்ணின் கடமை பிள்ளை பெற்றுக் கொடுத்தல் மாத்திரம்தான். பின்னர் ஏன் அவள் கல்வி கற்க வேண்டும் என்ற நிலையும் காணப்பட்டது. இதனாலும் பெண்ணானவள் தன் உரிமைகளுள் ஒன்றான கல்வியை இழக்கவேண்டிய நிலை காணப்பட்டது.

முன்னர் பெண்களுக்கு சிறுவயதிலே திருமணம் நடைபெறும். திருமணம் நடந்த பின்னரும்சரி, நிச்சயிக்கப்பட்ட பின்னரும் சரி அவளுடைய கணவன் இறந்தால் கணவன் எரியும் அந்த தீயிலே இவளும் விழ வேண்டும் எனும் உடன்கட்டை ஏறும் நிலை காணப்பட்டது. அவ்வாறு செய்யாவிடில் அவளுக்கு மொட்டையடித்து வெள்ளைச்சாறி உடுத்து வீட்டிலே அடிமைப்பணி செய்யும்படி கட்டாயப்படுத்துவார்கள். ஆனால் ஆண்களுக்கு இவ்வாறான ஒரு நிலை காணப்படவில்லை.

பெண்களுக்கும் சமூகத்திலே சமவுரிமை கிடைத்தால்தான் அதில் ஆணும் பெண்ணும் எடுக்கும் முடிவுகள் சரியாக இருக்கும். ஆனால் பொதுவாக அவ்வாறில்லை. தீர்மானங்களை எடுப்பதில் பெண்களைவிட ஆண்களே முன்னிடத்தில் காணப்படுகின்றார்கள். பல நாட்களில் பெண்களின் உரிமைகள் நசுக்கப்பட்டு வருகின்றன. குடும்பப் பிரச்சினைகளைக் கவனித்தல், பொருளாதார ரீதியில் உதவுதல், பிள்ளைகளின் பிரச்சினைகளை கவனித்தல் போன்ற பல விடயங்களில் உதவும் பெண்களின் அந்தஸ்து நிலை கவலைக்கிடமாகவுள்ளது.

பெண்களின் இந்நிலைமைகள் பற்றிக் கவனம் செலுத்தும் போக்கு அண்மைக்காலத்தில் உருவாகியுள்ளது. சமூகத்தில் பெண்களுக்கு இயல்பான சுதந்திரத்தை வழங்கி ஆண்கள் எவ்வாறு கௌரவிக்கப்படுகின்றார்களோ அவ்வாறே பெண்களும் சமூகத்தில் மேன்மையடைய வேண்டும் என்ற சிந்தனை இன்று பரலவலாகக் காணப்படுகின்றது.

பெண்களது இவ்வாறான பின்தங்கிய நிலையானது வளர்முக நாடுகளின் பொருளாதார நிலைக்கு மிகவும் பாதகமாக உள்ளதாகக் கருதப் படுகின்றது. பெண்களின் அந்தஸ்து நிலையினை மேன்நிலையடையச் செய்வதால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சினைகளை நாம் கட்டுப்படுத்த முடியும். பெண்களின் கல்வியறிவினை விருத்தி செய்வதன் மூலம் இதற்குத் தீர்வு ஏற்படும்.

உலகம் முழுவதிலும் பெண்களது நிலைகளை மேன்நிலையடையச் செய்வதற்காக அரசாங்கம் பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகின்றது. 1875ஆம் ஆண்டு உலக மகளிர் தினம் பிரகடனப்படுத்தப்பட்டது. இன்று உலகிலே பெண்களின் நிலையானது மிகவும் வளர்ச்சியடைந்து காணப்படுகின்றது. எந்த நிலையிலும் பெண்கள் இன்று குறைந்து விடவில்லை. இலங்கையின் முதலாவது பெண் பிரதமரே உலகின் முதலாவது பெண் பிரதமராகவும் திகழ்ந்தார்.

ஆகவே எமது நாட்டின் கண்கள் பெண்களே எமது கண்களுக்கு குருடு ஏற்பட்டால் உலகையே பார்க்க முடியாது. அது போல பெண்களுக்கும் பிரச்சினை ஏற்பட்டால் நாடே சீரழிந்து போய்விடும். எனவே பெண்களைக் கண்ணை இமை காப்பது போலக் காக்கவேண்டும்.

**செல்வி த. விஜிதா** (A/L 2008, கலைப்பிரிவு)

◆◆

## பெற்றோரைப் பேணுவோம்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்பது ஔவையின் வாக்கு. எமது தாய் தந்தையரே கண்கண்ட தெய்வங்களாக எமக்கு இருக்கிறார்கள். அவர்களைப் பேணிப்பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். மாதா, பிதா, குரு, தெய்வம் என்று கூறுவதன் மூலம் பெற்றோரை முதன்மைப்படுத்தி இருப்பதையே அறிகின்றோம்.

தாயானவள் எம்மைப்பாலூட்டி, சீராட்டி அன்புடன் வளர்க்கிறார். தந்தை நம்மை நல்வழிப்படுத்தி சமூகத்தில் நல்ல பிரஜையாக வாழ வழிகாட்டுகின்றார். எங்கள் நலனில் மிகுந்த அக்கறையுள்ளவர் எமது பெற்றோரே. அவர்களுக்கு நிகராக எமக்கு இவ்வுலகில் எதுவும் இல்லை. எனவே பெற்றோர் சொற்படி நடந்து வாழ்வில் உயர்வோம். அவர்களைப் பேணிப்பாதுகாத்து வாழ்வோம்.

செல்வி தர்ஷிகா குணபாலன் (தரம் – 3)

◆◆

## சமாதானப் புறா

வெள்ளை நிறத்துப் புறாவொன்று
வேகமாகப் பறக்கிறது.
மெல்ல எதையோ சொல்லுதற்காய்
மேலும் மேலும் பறக்கிறது.



சமாதானத்தின் சின்னமது!
சரியாய் பணியைச் செய்யவென்று
இமாசலம் போல் நினைவுடனே
எழுந்து மேலே பறக்கிறது.

பலரும் விரும்புஞ் சுகவாழ்வை
பகரும் புனிதச் சின்னமது!
குலவும் வாழ்க்கைக் கோலத்தைக்
குறித்தே அதுவுஞ் சொல்கிறது.

செல்வி சுகன்ஜா நவரத்தினம் (தரம் – 3)

◆◆

## சாதுரியமான சிறுவன்

குமார் மிகவும் விவேகமான ஒரு சிறுவன். அவன் ஒருநாள் தந்தையாரின் தோட்டத்திற்குச் சென்றான்.

தோட்டத்திற்குச் செல்லும் வழியில் சில சிறுவர்கள் ஒரு பற்றைக்குள் ஏதோ பொறுக்கியவாறு நின்றனர். அவர்கள் நிற்கும் பற்றையின் மறுபுறத்தில் கொடிய கரடி ஒன்று அவர்களைத் தாக்கும் நோக்குடன் பற்றையை நோக்கிப் பதுங்கி பதுங்கிச் செல்வதைக் குமார் அவதானித்தான்.

அந்த அப்பாவிச் சிறுவர்களைக் கரடியிடமிருந்து எப்படியாவது காப்பாற்ற வேண்டும் என்று குமார் எண்ணினான். வீதியின் அருகே ஒரு மூங்கில் தடி இருப்பதைக் குமார் கண்டான். அதனை எடுத்து அதில் இரண்டு துளைகள் இட்டான். அதன் மறுபுறத்தில் வாயை வைத்துப் பலமாக ஊதினான். கூ..... கூ..... என்று பயங்கரமான ஒலி மூங்கில் தடியிலிருந்து வெளியேறியது. அதனைக் கேட்ட கரடி அதிர்ச்சியுற்றுப் பாய்ந்து, பாய்ந்து தனது இருப்பிடத்தை நோக்கி ஓடியது. தம்மைத் தாக்கவந்த கரடியை குமார் துரத்தியதைக் கண்ட சிறுவர்கள் குமாருக்கு நன்றி கூறினர்.

நி. மித்திரன் (தரம் - 3 )

◆◆

## அமைதியின் சின்னங்கள்

உலகில் பல அமைப்புக்கள் குரல் கொடுக்க இருந்தும் இக் குரல் ஒலி ஓயவில்லையே! ஏன்?

கால் நடைக்கும் உயிர் வாழ உரிமையுண்டு. அதனைத் தொந்தரவு செய்தால் தண்டிப்பதற்குச் சட்டமுண்டு. ஆனால் குற்றமற்ற ஏதுமறியாப் பச்சிளம் பாலகர்கள் தம் மன உணர்வை வெளிப்படுத்தவும், கேட்கவும், நிம்மதியாக வாழவும் சந்தர்ப்பங்கள் உண்டா?

"நாங்கள் இருக்கிற நிலையில நீங்க படிச்சு என்ன கிழிக்கப்போறியள். போய் உழைச்சு வயிற்றை நிரப்பப் பாருங்கள்"

"இப்பத்தைய பிள்ளையளை அடக்கவே முடியாதாம். ஒரே குழப்படியா இருக்கு. சொல்வழி கூட கேக்குதுகளே இல்லை"

"பெரியவங்க போல ஏன் எதுக்கு எண்டு கேக்காம உன்ர வேலையைப் பார்"

இவை பெரியோருடைய அதிகாரக் குரல் ஒலி. இதில் இருந்து சிறுவர்களைக் காப்பாற்ற முடியாதா? இக் கேள்விக்கெல்லாம் பதில் தர ஐ. நா. ஸ்தாபனத்தினால் உருவாக்கப்பட்ட "சிறுவர் உரிமைகள் சமவாயம்" 41 கருத்துக்களை உள்ளடக்கி உலக நாடுகளின் அங்கீகாரத்துடன் வெளியிடப்பட்டுள்ளது. அதில் உயிர்வாழ்தல்,

மேம்பாடு, பாதுகாப்பு, பங்களிப்பு என்பனவற்றை அடிப்படையாகக்கொண்டு விளக்கங்கள் தரப்பட்டுள்ளன.

இதனிடையே தொழிலாளர் உரிமை, பெண்கள் உரிமை, அகதிகள் உரிமை என நீண்ட பட்டியலில் "மனித உரிமை" யும் பேசப்படுகிறது. அடிப்படை உரிமையான உயிர்வாழும் உரிமை யாவர்க்கும் இருந்தும் அதனைப் புரிந்து கொள்ளாத மனிதவாழ்வு நாளுக்கு நாள் சாவுக்கு முகம் கொடுக்கும் கொலைக்களமாகி விட்ட பூமியைத்தான் தரிசிக்கிறது.

எமது உரிமைகளைப்பற்றிப் பேசும் நாம் சிறுவர்களுக்கு உரிமைகளைக் கொடுக்கின்றோமா? குழந்தைகள் பிறப்பால் செய்த குற்றமா? சாதி, மதம், இனம், மொழி, நாடு என பேதங்களை அனுபவிப்பது.

பெரியோர் தம் மன அழுத்தங்களைப் பல வழிகளில் வெளிப்படுத்தச் சந்தர்ப்பம் உண்டு. நண்பருடன், உறவினருடன், மருத்துவ நிபுணருடன் என சொல்லித் தீர்த்துக் கொள்வார்கள். சிறுவர்களின் மனவடுக்களை வெளியிடுவதற்கான உரிய சந்தர்ப்பங்களை ஏற்படுத்த சிறுவர்களுக்கு உரிய களம் எம் மண்ணில் அரிது. அதனை எற்படுத்திக் கொடுப்பது எமது கடமை என பொறுப்புள்ள யாவரும் ஏற்றுக் கொண்டு செயற்பட்டாலே எம் சிறுவர்களின் மனஅழுத்தம், மனவருத்தம் தீர வழி பிறக்கும். இவை சலுகைகள் அல்ல; சிறுவர்களின் உரிமைகளே. இந்த உரிமைகளை அறிந்தவர்களே மனித உரிமை பற்றிப் பேசவும் தகுதி உடையோராகின்றனர் எனலாம்.

சிறுவர் தம் உரிமைகளை அறிந்துகொள்ள, அனுபவிக்கச் சில வழிவகைகளைக் கையாளலாம். சிறுவர்கள் உயிர் வாழவும், உரிமைகளை மதித்து வாழவும் வழிகாட்டல், உடல், உள, சுகாதாரசிகிச்சை, புனர்வாழ்வு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் முக்கியமானது.

சிறுபராயம் முதல் உயர் கல்வி வரை கல்வி வளர்ச்சிக்குத் தூண்டி ஊக்குவித்து வழிகாட்டி ஆளுமை, திறமை, உடல்–உள வளர்ச்சியினை மதிப்பதுடன் ஆண், பெண் பேதமின்றி சுதந்திரமாக வாழ வழிகாட்டுதலும், பங்காற்றுதலும், ஓய்வு பொழுதுபோக்கு, கலைபண்பாட்டு நிகழ்வில் பங்கேற்கவும், கருத்துக்களை வெளிப்படுத்தவும் சுதந்திரமாக இயங்கவும் வழிகாட்டல் போன்றவற்றோடு மனம் விட்டுப்பேசும் நம்பிக்கைக்குரியவராகவும் வழிகாட்டிகள் மாற வேண்டும்.

சிறுவர் திறமைகள் செயல்களை வெளிப்படுத்த ஊக்குவிப்போராகவும் மாறுவோம். போர்ச் சூழலை எதிர் கொள்ளக் கூடிய மனத்தைரியத்துடன் சவால்களை எதிர் கொள்ளும் சமாதானச்சின்னங்களாகவும் அவர்கள் வாழ வழி காட்டுவதே நல்ல பணியாகும்.

**சி.** அனுஷா (A/L 2009)

◆◆

## நினைவு கூருகின்றோம்



பாடசாலையினைப் பேரிடர் சூழ்ந்த வேளையில் பொறுப்பேற்று பல துன்பங் களையும் தாங்கியவாறு கல்லூரியை இயக்கிய மதிப்பிற்குரிய இளைப்பாறிய அதிபர் செல்வி போஷேந்திராதேவி கந்தசாமி அவர்கள் 28. 10. 2005 அன்று அமரரானார். அன்னாரின் ஈராண்டு நிறைவுறும் இந்நாள்களில் அவரையும், அவரது பழுதிலாத் திறத்தையும் சேவைகளையும் உள்ளன்போடு நினைவு கூருகின்றோம்.

# THE BUS STAND

The bus stand is a busy place like a fair
The type of passenger is you find there
Pickpockets snatch the purse like a hare
Jumping from a hole nearby there



Sweets, sweets, a small boy will shout
Paper, paper, the paper boy howls
Passenger here, passenger there
The conductors busy collecting the fare

Beggars move up and down for alms
But some passengers keeping calm
Some passengers stretching their arm
It's a way of collecting some palm

Mrs.F.R.J. Jeyanthan

# RAIN FOREST

Tropical rainforests are located around the equator. The temperature around the equator is very high . Hence the rate of water evaporation is high. As a result there is Frequent rain in rainforests. They are Found in South and Central America, Africa, in the islands around Australia and Asia. The rainforests are important to human existence and the surroundings. Rain Forests are a rich source of medicinal plants, food and useful Forest products. They maintain about 50% of the plant, animal, bird, reptile and insect species of the world. These Forests help to maintain a regular rainfall. They also stand as a buffer against floods, droughts and erosion. These forests produce a significant amount of the word's oxygen.

T. Ameera (10B)

# Humorous Ending

There was a coconut tree behind our house, bending over the kitchen roof. Coconut fronds and nuts often come down on the kitchen roof. Every time this happened, father had to go to up a ladder to get on to the roof and rest the broken tiles. Mother was annoyed and complained about the tree. One morning father came with two men. One carried a long, thick tope and the other had an axe in his hand. One of them climbed the coconut palm and tied one end of the rope round it. After he had come down the other worker began to cut the tree. When the trunk was half cut, father and the two men took the other end of the rope away from the house and tugged at it.



Ah! What a sound! The tree fall on the kitchen roof. All the tiles of kitchen were broken. The tree fall down into the kitchen and damaged the things of the kitchen. The mother in the kitchen ran out and shouted. "What happened?" No answer. She looked the father and the two men fall down with rope. Then they stood up and saw the trunk on the kitchen roof. The father turned and saw the two men angrily. The men without making payment ran out fast.

T. Januya (10B)

◆◆

## A FATHER'S TEST

An old man of future wanted to test the commonsense of his three sons who where living apart. He gave each of them an equal sum of money. He told them that they were free to buy anything they desired. But there was one condition. The articles which they brought should fill their houses. The old man further said that he would visit them on a particular day to see how they faired.

The old man accordingly visited the houses of his sons One had filled his house with bundles of hay. The second son had spent all the money on a few valuable things. The third son entertained his father with a sweet smell of a nice lamp was shedding its light all over the house. The house had all the grace of fullness. The father smiled. It was a smile of approval.

K. Rathy

◆◆

## NEWS PAPERS




News papers are the most important part in the modern mass media. They have some thing for each and every person in a family. They have headlines, notices, advertisements, foreign news, local news, sports news, classifieds, obituaries and so on.

➤ Headlines give the gist of a news items. They catch the eye Every news paper has an editorial. It is written by the editor. The subject of an editorial is usually one of current interest either local or foreign. The editorial makes good reading.

➤ There are news in news papers on routine events, unexpected events, crime and war It is a duty of a journalist to cover these things for the news papers. A good journalist is expected to use the right of free expression with a sense of responsibility and to report news stories accurately and impartially.

➤ The news papers is a good servant but a bad master Time and again in the word's history the unguarded words press a country have precipitated upon its countrymen the awful and innumerable catastrophies of a bloody war.

K. Janitha (10B)

◆◆

## மனைக் கல்வியின் மகத்துவம்

மனைப் பொருளியல் நுட்பத்தினைக் கேட்டிட வாரீர்
மனைப்பொருளியல் பயன்பாட்டை கேட்டிடவே வாரீர்
சமையல் பாடம் மட்டுமென்ற முன்னோரின் பேச்சு
தவறான கருத்தென்று முடிவாகிப் போச்சு

Zஸ்கோரில் முன்னிற்கும் முன்னணிப் பாடம்
பல்கலைக் கழகத்திற்கு நுழைவதற்கு முக்கிய பாடம்
சுயதொழில் வாய்ப்பினை பெருக்கிடும் பாடம்
மனையையும் நிர்வகிக்க உதவிடும் பாடம்

உணவுப் பழக்கத்தினைத் தெளிவாகக் கூறும்
நோய்களையும் நோய்க்காரணிகளையும் கூறும்
நோய் பராமரிப்பைத் தெளிவு படக்கூறும்
முதலுதவியையும் முழுமையாகக் கூறும்

பல்கலை சென்று பலகாலம் வேலைக்கு காத்திருப்போர் மற்றோர்
பல்வகை சுயதொழில் செய்து பிறருக்கு தொழில் கொடுப்போர் நம்மோர்
ஏற்றமுண்டு இக்கல்விக்கு இளக்கமில்லை ஒரு நாளும்
தொழிற் கல்விக்கே இனி வாய்ப்பு எந்நாளும்.

**திருமதி அ. ஈஸ்வரன்**

# மாதகல் மயில்வாகனப் புலவர்

இலங்கைத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே பைந்தமிழ் வளர்த்த பாவலர்கள் வரிசையிலே இடம் பெறும் சிறப்பிற்குரிய புலவர் மாதகல் மயில்வாகனப் புலவர். இவர் யாழ்ப்பாணத்தில் பண்டத்தரிப்பு கோயிற் பற்றைச் சேர்ந்த மாதகல் என்ற கிராமத்தில் சுப்பிரமணியம் – சிதம்பரம் தம்பதியினருக்கு மகனாகத் தோன்றினார். வாழையடி வாழையாக வந்த புலவர் பரம்பரையைச் சேர்ந்தவரான இவர் கண்டியரசன் பேரில் கிள்ளைவிடு தூது பாடிய மாதகல் சிற்றம்பலப் புலவரின் மருமகனாவார். ஒல்லாந்தர் காலப்பகுதியில் வாழ்ந்தவராகக் கருதப்படும் இப்புலவர் யாழ்ப்பாணச் சரித்திரத்தை நாம் அறிந்திட வழி செய்துள்ளார்.

புலவர் பெருந்தகை மாமனாராகிய சிற்றம்பலப் புலவரிடம் இளமையில் கல்வி கற்றார். பின்னர் தமிழ் நாட்டிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்திருந்த கூழங்கைத் தம்பிரானிடம் மேலும் கற்றுத் தமது அறிவை வளப்படுத்திக் கொண்டார். கல்வியிலே பாண்டித்தியம் பெற்று விளங்கிய இவர் எழுதிய யாழ்ப்பாண வைபவமாலை என்னும் உரைநடை நூலும் அவர் இயற்றிய செய்யுள் நூல்களும் தமிழ் இலக்கிய வரலாற்றிலே அழியாத ஒரு இடத்தினைப் பெற்றுக் கொடுத்துள்ளன.

தமிழ்ப் புலமை மிக்க இவர் தமது காலத்திற்கு முன்னர் பெரும் புலவர் பரம்பரை ஒன்று ஈழத்தில் வாழ்ந்திருந்ததை அறிந்தே யாழ்ப்பாண வைபவ மாலை என்னும் வரலாற்று நூலை ஆக்கினார்.

யாழ்ப்பாண வைபவமாலை ஈழத்து வரலாற்று நூல்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந் நூலில் உள்ள தகவல்கள் அனைத்தும் அடிப்படையில் முற்றும் சரியானது எனக் கூற முடியாவிடினும் யாழ்ப்பாணத்து சரித்திரத்தை ஆய்ந்து அறிவதற்கு துணை புரிகின்றது. புலவர் வைபவமாலையை எழுதுவதற்கு கைலாயமாலை, வையாபாடல், பரராசசேகரன் உலா, இராசமுறை ஆகியவற்றை ஆதாரமாகக் கொண்டுள்ளார். புலவர் ஒருவர் வரலாறு எழுத முனையும் போது ஏற்படும் பிரச்சினைகளை இந்நூலிலும் காண முடிகின்றது. ஆயினும் இலகுவில் வாசித்துப் புரிந்து கொள்ளக்கூடிய உரைநடையில் புலவர் இந்நூலை எழுதியுள்ளார்.

மயில்வாகனப்புலவர் உரைநடையிலான யாழ்ப்பாண வைபவமாலை தவிர்ந்த புலியூரந்தாதி, ஞானரூபலங்காரநாடகம், காசியாத்திரை விளக்கம் ஆகிய நூல்களைச் செய்யுள் வடிவிலும் எழுதியுள்ளார்.

தமிழ் நாட்டின் சிதம்பரத்தில் கோயில் கொண்டிருக்கும் சிவபிரான் மீது பாடப்பட்டது புலியூரந்தாதி ஆகும். புலியூர் என்பது சிதம்பரத்தின் மறு பெயராகும். மயில்வாகனப் புலவரின் வித்துவத் திறமைக்கு இந்நூல்

எடுத்துக்காட்டாக விளங்குகின்றது. நூறு கட்டளைகளைக் கலித்துறைகளால் அமைந்த இந்நூலில் பல செய்யுள்கள் மிகுந்த பொருள் செறிவுடையனவாகும்.

புலவரது நாடகத்துறை சார்ந்த ஆர்வத்தை ஞானாலங்காரரூப நாடகம் உணர்த்துகின்றது. ஆத்மீக தத்துவத்தை உருவக உத்தியில் பாடிய நூலாக இதனைக் கருதுவர்.


காசியாத்திரை விளக்கம் என்ற நூல் இவரது காசி யாத்திரை அனுபவங்கள் பற்றிக் கூறப்பட்டிருத்தல் வேண்டும். இந்நூல் கால வெள்ளத்தில் அழிக்கப்பட்டு விட்டது. மயில்வாகனப்புலவர் சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய கல்வளை அந்தாதிக்கும், சுன்னாகம் வரதபண்டிதர் இயற்றிய சிவராத்திரி புராணத்திற்கும் சிறப்புப்பாயிரக் கவி ஒன்றை வழங்கியுள்ளார். இது இவரின் காலத்தை உறுதி செய்வதாக அமைகிறது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதிலும், 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கைத் தமிழ் இலக்கியப் போக்கினை அறிந்து கொள்வதற்கும் மயில் வாகனப் புலவரின் படைப்புக்கள் துணை புரிகின்றன. செய்யுள் நூல்களைக் கற்றோர் காமுறும் வண்ணமும், யாழ்ப்பாண வைபவமாலையைச் சகலரும் விளங்கத்தக்க வகையிலும் எழுதியுள்ளமை கவனத்திற்குரியதாகும். இந்த வழக்கினை அவர்காலத்திலும் அதற்குப் பின்னரும் வாழ்ந்த தமிழ் அறிஞர்கள் கையாண்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்க அம்சமாகும். இவரது தமிழ்த் தொண்டு எஞ்ஞான்றும் நினைவு கூரத்தக்கதாகும்.

◆◆

# நமது பூமி

**புவியோடு 10 தொட்டு 50 கி. மீ. துடிப்பானது. கற்கோளம் 100 கி. மீ. தடிப்பானது. இவை 2900 கி. மீ. தடிப்புக்கொண்ட பாகுத்தன்மை வாய்ந்த மான்ரில் படையில் மிதக்கின்றன. மான்ரில் படையின் கீழ் கோளவகம் அமைந்துள்ளது. இக்கோளவகம் 6370 கி. மீ. ஆரங் கொண்டது. வெளிக கோளவகம் உருகிய பாறைக் குழம்பா கவும், உட்கோளவகம் திடமானதாயும் காணப்படுகின்றது.**




◆◆

# பொது அறிவுப் போட்டி – 1

1. இந்தோனேசியா என்ற நாடு எத்தனை தீவுகளைக் கொண்டது?
2. இந்திய காவல்துறையின் பெண்புலி என வர்ணிக்கப்பட்ட சாதனைப் பெண்ணின் பெயரென்ன?
3. இலங்கைக்குப் புனித வெள்ளரசு மரக்கிளையை எடுத்து வந்த பிக்குணி சங்கமித்தை வந்திறங்கிய இடம் எது?
4. யாழ்ப்பாணத்தில் முக்கிய பெண்கள் பாடசாலைகளை நிறுவிய மத நிறுவனம் எது?
5. மகாத்மா காந்தி தனது சுயசரிதை நூலான சத்திய சோதனையில் தன்னை நெறிப்படுத்திய ஒரு நாடகத்தைக் குறிப்பிடுகிறார். அதன் பெயரென்ன?
6. உலகில் அதிக மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட தமிழ் நூல் எது?
7. விண்வெளியில் அதிக காலம் தங்கியிருந்து பூமிக்கு மீண்டு சாதனை நிலைநாட்டிய பெண் விஞ்ஞானியின் பெயரென்ன?
8. இலங்கை அரசியலில் செல்வாக்குச் செலுத்தும் மூன்றாவது பெரிய அரசியற் கட்சியின் பெயரென்ன?
9. ஒலிம்பிக் போட்டியில் முதலிடம் பெற்ற வீராங்கனை விலகியதால் இலங்கைக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது. இதைப் பெற்றுக் கொடுத்த வீராங்கனையின் பெயரென்ன?
10. இணையத் தொடர்பாடல் தொழிநுட்பத்தில் கணனி தொலைபேசி இணைப்புக்கு உதவும் கருவியின் பெயரென்ன?

☒ மாணவர்கள் மட்டும் பங்குபற்றலாம்.

☒ விடைகளை நவம்பர் 17, 2007 ற்குப் பிந்தாமல் ஆசிரியர், பண்மகள், பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

☒ அனேகர் சரியான விடைகளை அளிக்கும் பட்சத்தில் குலுக்கல் முறை மூலம் வெற்றியாளர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர்.

☒ வெற்றியாளர் மூவருக்கு முறையே 150 ரூபா,100ரூபா,50ரூபா பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

–ஆசிரியர்

1918ஆம் ஆண்டு போதகர் அல்பிரெட் கந்தையா அவர்களின் காலத்தில் ஆங்கில பாடசாலையாக மாற்றமுற்றது. அக்காலத்தில் கே. பி. ஜோன் அவர்கள் தலைமையாசிரியராகப் பொறுப்பேற்று பாடசாலையை வழிநடத்தினார். அவரைத் தொடர்ந்து எல். வி. சின்னத்துரை அவர்களின் வழிநடத்தலில் பாடசாலை இயங்கியது.

1939ஆம் ஆண்டில் பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலை என்ற பெயருடன் துவிபாஷா (தமிழ், ஆங்கிலம்) விடுதிப் பாடசாலையாகவும் விளங்கிது. இக்காலத்தில் திருமதி புளோறா கனகதுங்கம் அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்று (1939 – 1947) பல துறைகளிலும் கல்லூரியை வளரச் செய்தார்.

இவரைத் தொடர்ந்து பதவியேற்ற செல்வி கிருபைமலர் மதியாபரணம் அவர்கள் கல்லூரியைப் புதிய தோற்றத்துடன் மிளிரச் செய்தார். பல புதிய கட்டிடங்கள் கட்டப்பட்டன. சிறந்த பெண்கள் பாடசாலையாகவும், ஆங்கில பாடசாலையாகவும் விளங்கியது இவரது காலத்திலேயே ஆகும். அத்துடன் அரசாங்கப் பாடசாலையாகச் சுவீகரிக்கப்பட்டு 1A பாடசாலையாகவும் விளங்கியது.

அடுத்து செல்வி சரவணமுத்து, திருமதி காயத்திரி கணேசன் ஆகியோர் அதிபர்களாக இருந்தனர். 1972ஆம் ஆண்டின் பின்னர் திருமதி க. ஆறுமுகதாசன் அவர்களது காலத்திலும் பாடசாலை பல்வேறு அபிவிருத்திகளைக் கண்டது.

1986இன் பின்னர் முறையே திருமதி மு. சுப்பிரமணியம், திருமதி தே. தம்பிராசா, திருமதி வி. சிவபாக்கியநாதன், திருமதி க. சண்முகநாதன் (பதில் அதிபர்), திருமதி செ. மகாலிங்கம், திருமதி ஆ. சிவஞானசுந்தரம் ஆகியோர் அதிபர்களாக விளங்கினர். 1992இல் செல்வி போ. கந்தசாமி அவர்கள் அதிபராகப் பொறுப்பேற்றார். அக்காலப் பகுதியில் இடம்பெற்ற "முன்னேறிப்பாய்தல்" இராணுவ நடவடிக்கை காரணமாகப் பாடசாலைக் கட்டிடங்கள் அழிந்து போயின. மக்களோடு மக்களாக பாடசாலையும் இடம்பெயர்ந்தது. மிகுந்த சிரமத்தின் மத்தியில் கட்டிடங்களோ, தளபாடங்களோ இல்லாமல் ஒவ்வொரு இடங்களாக மாறி மாறி பாடசாலையை இயங்க வைப்பதில் அதிபர் பட்ட பாடுகள் சொல்லில் அடங்காதவை. இவ்வாறு இடம்பெயர்ந்து வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி, சித்தன்கேணியிலுள்ள தனியார் வீடு, மானிப்பாய் மகளிர் கல்லூரி, சாவகச்சேரி மகளிர் சல்லூரி ஆகிய இடங்களில் பல வசதியீனங்களுடன் பாடசாலை இயங்கியது.

1996இல் மீள்குடியேற்றம் இடம்பெற்ற வேளை பற்றைகளும், மதிவெடிகளும் சூழ்ந்திருந்த பாடசாலைக்குள் அஞ்சாமல் சென்று அவற்றை அகற்றி பாடசாலையை இயங்கச் செய்தார். செல்வி போ. கந்தசாமி அவர்கள் 2004இல் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து திருமதி கி. சிவராஜா அவர்கள் பாடசாலையின் அதிபராகப் பொறுப்பேற்று தொடர்ந்து வழிநடத்தி வருகிறார். பாடசாலையில் புதிதாக இரு மாடிக்கட்டிடம் கட்டப்பட்டு பல கட்டிடங்கள் புனரமைக்கப் பட்டுள்ளன. ஆயினும் பௌதீக வளங்களில் தன்னிறைவற்ற நிலையிலேயே எமது பாடசாலை இயங்கிக்கொண்டு இருக்கிறது. வடமாகாணத்தில் முன்னணிப் பெண்கள் பாடசாலையாக சுபீட்சமான நிலையை அடையும் தொலைநோக்கோடு அது நடைபயில்கிறது. அதைச் சாத்தியமாக்கும் பொறுப்பு பண்மகளின் புத்திரிகள் ஒவ்வொருவரதும் கைகளில்தான் இருக்கிறது.

♦♦

Dr. T. KALAMANY EdD (Aus)
Senior Lecturer, Dept. of Ed.
UNIVERSITY OF JAFFNA

# பண்மகள் பாடசாலைக் குரலாய் ஒலிக்கட்டும்



பண்டத்தரிப்பு பெண்கள் உயர்தர பாடசாலையின் காலாண்டு சஞ்சிகையாக "பண்மகள்" பவனி வர ஆரம்பிப்பதையிட்டு பேருவகையடைகின்றேன்.

184 ஆண்டுகள் தொன்மை வாய்ந்ததும், சிறப்பான கலாசாரப் பின்னனியுடையதுமான எமது பாடசாலையின் கீர்த்தியைப் பறைசாற்றும் ஏடாக பண்மகள் விளங்குமென நம்புகின்றேன். பாடசாலையைப் பிரசித்தப்படுத்தல், பாடசாலையின் தரவுகளையும் நிகழ்ச்சிகளையும் ஆவணப்படுத்தல், பாடசாலை ஆசிரியர்களதும் மாணவர்களதும் ஆக்கத்திறன்களை வளர்த்தல் ஆகிய உயரிய நோக்கங்களை முன்னிறுத்தி இவ்விதழ் மலர்கிறது.

பண்மகள் தனது நோக்கங்களை நிறைவேற்றும் வகையில் உலாவர எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். இச்சஞ்சிகைக் களத்தைச் சரிவரப் பயன்படுத்தித் தம்மை வளர்த்துக் கொள்ளவேண்டுமென ஆசிரியர்களையும் மாணவர்களையும் வேண்டுகின்றேன்.

**திருமதி கி. சிவராஜா (அதிபர்)**

## பாடசாலையின் தொலை நோக்கு

உறுதியோடும் அர்ப்பணிப்போடும் ஐக்கியமாகச் செயற்பட்டு கல்வி நிலையில் வட மாகாணத்தில் முன்னணிப் பெண்கள் பாடசாலையாக மிளிர்தல்.

## பாடசாலையின் செயல் நோக்கு

நாட்டினதும் பிரதேசத்தினதும் சமூகப் பண்பாட்டு விழுமியங்களைப் பேணி சமநிலை ஆளுமையுடன் சவால்களை வென்று உன்னத நிலையை எய்தும் வண்ணம் வனிதையரை உருவாக்குதலும், கீர்த்தி மிக்க பாடசாலைக் கலாச்சாரத்தை ஏற்படுத்துதலும்.